# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2288/18 - 2022 ජූලි මස 12 වැනි අඟහරුවාදා - 2022.07.12

*2288/18 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**யாத்திரைகள் கட்டளைச் சட்டம்**

திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் - 2022

**திருக்கோவில் பிரதேச செயலகப் பகுதி - அம்பாறை மாவட்டம்**

மேற்குறிப்பிட்ட ஆலய உற்சவம் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி ஆரம்பித்து 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி தீர்த்தோற்சவத்துடன் பூர்த்தியடையும் என்பதை யாத்திரிகர்களுக்கும் இவ் உற்சவத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1951 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதி வெளியிடப்பட்ட 10247 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் யாவற்றினையும் யாத்திரிகர்களுக்கும் உற்சவத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் கவனத்தில் எடுக்கும்படி இத்தால் வேண்டப்படுகின்றீர்கள்.

இவ் உற்சவத்திற்கு முகாம் பின்வருமாறு விஸ்தரிக்கப்படுகிறது :

வடக்கு : மகா வித்தியாலய வீதி, தம்பிலுவில் ;
கிழக்கு : கடற்றொழில் வீதி, திருக்கோவில் ;
மேற்கு : பிரதான வீதி, திருக்கோவில் ;
தெற்கு : கடற்கரை வீதி, திருக்கோவில்.

**ரீ. கஜேந்திரன்,**
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
திருக்கோவில்.

EOG 07-0067